தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 8 திகதி: 29.11.2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	20	
வினா 3	15	
வினா 4	15	
வினா 5	25	
வினா 6	10	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

பின்வரும் உரை பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

என்னுடைய பாட்டி ***''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு''*** *என்று என்னைப் பார்த்துச் சொல்வார். அப்போது எனக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. பெரிதாக வளர்ந்த பின் தான் புரிகிறது கோபத்தால் என் நண்பர்கள் பலரை இழந்திருக்கிறேன். நான் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கும் போது* ***''ஆழம் அறியாமல் காலை விடாதே''*** *என்று என் தாத்தா புத்திமதி சொல்வார். அவரது ஆலோசனையை கேட்டிருந்தால் நான் தோல்விகளைச் சந்தித்து இருக்க மாட்டேன்.* ***''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்''*** *என்று அப்பா அடிக்கடி சொல்வார். நான் கிடைத்த நல்ல வாய்ப்புகள் எல்லாவற்றையும் தவற விட்டதால் இன்று வேதனைப் படுகின்றேன். நான் தோல்விகளை சந்திக்கும் போதெல்லாம் என் அம்மா* ***''வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்''*** *என்று சொல்லி நம்பிக்கையூட்டுவார். அதாவது திறமையில் நம்பிக்கை வை. அதுமட்டுமல்ல,* ***அடி மேல அடி எடுத்து வைத்தால் அம்மியும் நகரும்.*** *அதாவது விடாமுயற்சி பலனைத் தரும். துவண்டு விடாதே முயற்சி செய் என்று நம்பிக்கை ஊட்டுவார். அது மட்டுமல்ல என்னைச் சுற்றி நல்ல சொந்தங்கள் இருந்தும் நான் இப்படி இருப்பதற்கு யார் காரணம், நான் தானே காரணம்.*

1. *இவ்வுரைப் பகுதியில் வரும் உறவு முறைகள் எவை?*

---

2. *புத்திமதி என்பதன் பொருள் என்ன?*

---

3. *கோபம் என்பதன் எதிர்ச்சொல் என்ன?*

---

4. *தாத்தா என்ன அறிவுரை கூறினார் ?*

---

5. *''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'' என்ற பழமொழியின் கருத்து என்ன?*

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	4

பின்வரும் உரைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

உலகில் தோன்றிய நூல்களில் திருக்குறள் வாழ்வியல் நூலாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்குறள் தமிழில் எழுதப்பட்ட மனித வாழ்வியல் நூலாகும். மனிதனுக்குத் தேவையான அனைத்தும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் போன்ற அனைத்திலும் நெறியோடு வாழ திருக்குறள் வழிகாட்டி நூலாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரை பல பெயர்களில் அழைப்பார்கள். அதாவது தெய்வப் புலவர், திருநாவலர், பொய்யாமொழிப் புலவர், நாயனார் என்று குறிப்பிடுவார்கள்.

திருக்குறள் என்பது தோன்றி பல வருடகாலம் ஆனாலும் அதன் சிறப்பு தொலைந்து போகாது. இந்தத் திருக்குறளை எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் திருவள்ளுவர் எழுதியுள்ளார். உலகம் எப்படி வளர்ச்சி அடைந்தாலும் நாகரிகமானாலும் மனிதன் வாழ்க்கைக்கு ஏற்ப இந்தக் குறள்கள் அமைந்திருக்கும். இதில் 133 அதிகாரம் கொண்டு 1330 குறள்கள் உள்ளன.

ஒவ்வொரு குறளும் தமிழில் பொறிக்கப்பட்டிருந்தாலும் தமிழர்களுக்காக மட்டும் எழுதப்படவில்லை. உலகில் வாழும் அனைத்து மனித குலத்திற்கும் இது பொருந்தும் வகையில் எழுதப்பட்டிருந்ததால் இதைப் பொது நூல் எனக் குறிப்பிடுவார்கள். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பால்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட நூலே திருக்குறள் ஆகும்.

இந்த நூலை பலர் தங்களது நல்வாழ்விற்காக அவர்களின் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்கள். இந்த நூலை முதல் முதலில் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் ஆவர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வந்த இவர், தமிழைக் கற்றுக் கொண்டு திருக்குறளின் மகிமையை அறிந்து பிற மொழியினருக்கு இது தேவையென்று அறிந்து இதை மொழிபெயர்த்தார். இதற்குப் பிறகு திருக்குறளை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகறியச் செய்தார்கள். அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறள் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்த திருக்குறள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய நூலாகும்.

1. திருக்குறள் இவ்வுரைப் பகுதியில் எப்படியான நூலாகக் குறிப்பிடப்படுகிறது?

---

2. திருக்குறளை ஏன் பொது நூல் எனக் குறிப்பிடலாம்?

---

3. திருக்குறளை ஏன் பிற மொழிகளில் மொழி பெயர்த்தார்கள்?

---

4. திருக்குறளை முதன் முதலில் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?

---

5. திருவள்ளுவரின் மறுபெயர்கள் எவை?

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	6

பின்வரும் சொற்களை வைத்து ஐந்து சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக.

1. அல்லும் பகலும்

---

2. உற்றார் உறவினர்

---

3. பாரம்பரியம்

---

4. வாணி விழா

---

5. ஆராய்ச்சி

---

6. விளையாட்டு

---

7. நூல் நிலையம்

---

8. இசைக் கச்சேரி

---

9. முதியோர்

---

10. வரவேற்பறை

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	8

பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி, குறைந்தது 80 சொற்களில் ஒரு மின் அஞ்சல் எழுதுக.

நீர் விடுமுறையில் வெளிநாடு சென்ற போது **அல்லது** உள்ளூரில் சுற்றுலா சென்றபோது பெற்ற உங்கள் தனிப்பட்ட அனுபவங்களை உங்கள் நண்பனுக்கு எழுதுக.

குறிப்புகள்:
இயற்கை அழகு – விடுமுறைக்கு சென்றதற்கான காரணம் – உணவின் சுவை – சுற்றுப்புற சூழல் மற்றும் மக்கள் – கடைகள் / சந்தைகள் – அன்பும் நட்பும்

வினா இல	5	புள்ளிகள்	25	பக்கம்	10

பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. உங்கள் குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ உள்ள ஒரு முதியவரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு, முதியோரை நாம் எவ்வாறு பராமரிக்கலாம் என்பதையும், அவர்களிடம் இருந்து நாம் எவற்றைக் கற்றுக்கொள்ளலாம் என்பதையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.
2. உமது குடும்பத்தினர் ஓய்வுநேரத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும், அவை குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதில் அளிக்கும் பயன்களையும் விளக்கி, உமது பாடசாலையின் *கதிர்* இணைய சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக
3. பல்கலாசார சூழலில் வாழும் புலம்பெயர் தமிழராகிய நாம் எமது கலாசாரத்தைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? உங்கள் எண்ணத்தைக் காரணங்களுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கிக் கட்டுரை எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	10	பக்கம்	12

கேட்டுக் கிரகித்தல்.

உரைப் பகுதியைக் கேட்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இளமைப் பருவத்தில் கற்பது ஏன் இலகுவாக உள்ளது என்று இங்கு குறிப்பிடப்படுகிறது?

_____

_____

_____

2. எவ்வாறான உடற்பயிற்சிகளை செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது?

_____

_____

_____

3. எப்படியான பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகின்றது?

_____

_____

_____

4. வாழ்க்கையில் சிறந்து வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது?

_____

_____

_____

5. இதற்கு பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக

_____